1990 ஏப்ரல் 23]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பப் பணிகள் எப்போதும் சிறிது காலதாமதம் ஆகின்றது. காரணம் நில ஆர்ஜிதம் செய்யப்படுவதாலே ஏற்படுகின்ற பிரச்சினைகள். ஆகவே, நில ஆர்ஜிதம் செய்யப்படுவதாலே ஏற்படு ன்ற அந்தப் பிரச்சினைகளெல்லாம் நீக்கப்பட்டு, அந்தப் பணி விரைவுபடுத்தப் பட்டிருக்கிறது. ஆகவே, அந்தத் திட்டம் விரைவில் நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் வறட்சியால் கடுமையான குடி தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள சித்தூர், இருப்பாளி தாராபுரம், வைகுந்தம் போன்ற ஊராட்சிகளையும் சேர்த்து விரிவுபடுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

சாவடிப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையம்.

*6306. திரு. பி. மாரப்பன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காங்கேயம் தொகுதி, சாவடிப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மேலும் 2 டாக்டர்கள் நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் தொகுதி, சாவடிப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மேலும் இரண்டு மருத்துவ அலுவலர்கள் நியமனம் செய்வது குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாவடிப்பாளையம் என்ற ஊரிலேயிருந்து ஈரோட் டிற்குச் செல்ல வேண்டியதாக இருந்தால் 50 மைல் போக வேண்டும். திருப்பூருக்குப் போக வேண்டுமென்றால் 30 மைல் செல்ல வேண்டும். கோவையாக இருந்தால் 60 மைல் செல்ல வேண்டும். அப்படிப்பட்ட ஒரு இடத்திலே ஒருவர் நன்கொடை கொடுத்து ஆஸ்பத்திரி கட்டிக்கொடுத்து இருக்கிறார். அந்த இடத்திலே, தேவையான டாக்டர்களை இந்த அரசு நியமிக்கா மல், முதலில் ஒருவரை நியமித்தார்கள். யார் வந்தாலும் அவர்கள் லீவ் போட்டுவிட்டு போய்க் கொண்டே இருக்கிறார்கள்.

[1990 ஏப்ரல் 23

டாக்டர் இல்லாமல் ஜனங்கள் தினசரி ஆஸ்பத்திரிக்கு போய்க் கொண்டும் திரும்பிக்கொண்டும் இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதைப்போல என்னுடைய தொகுதியிலே இருக்கக் கூடிய சென்னிமலை, காங்கேயம் நகரத்திலே இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிக்கு 30 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த ஜனத் தொகையின் அடிப்படையிலே 2 டாக்டர்களையோ மூன்று டாக்டர்களையோ போட்டார்கள். இதுவரையிலும் டாக்டர் களுடைய எண்ணிக்கையை இன்கிரீஸ் பண்ணவில்லை. ஆனால் மற்ற தொகுதிகளை எடுத்துப்பார்த்தால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மாரப்பன் அவர்கள் உடம்பைக் கவனித்துக் கொள்ள வேண்டும். வினாவைச் சுருக்க வேண்டும்.

திரு. பி. மாரப்பன்: நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், கடந்த 4½ மாதகாலமாக ஆஸ்பத்திரியிலே இருந்த காரணத்தினால் சொல்கிறேன், டாக்டர்கள் இல்லாத காரணத் தினாலும், அந்த டாக்டர்களுக்கு வேண்டிய வசதிகளை அங்கே செய்யாத காரணத்தினாலும் அங்கு இருக்கக்கூடிய நோயாளி கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை அனுபவரீதியாக உணர்ந்த காரணத்தினால் இந்த அவைக்கு எடுத்துச்சொல் கிறேன். ஆகவே, இந்தக் காரியங்களை உடனடியாக குறிப் பிட்ட அமைச்சர் அவர்களும் நமது மாண்புமிகு முதல்வர் அவர் களும் கலந்து பேசி நல்ல காரியங்களை நாட்டிற்கு உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அரசு நிச்சயமாக நல்ல காரியங்களைச் செய்து வருகிறது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இரண்டு மருத்துவர்கள் மட்டுமே நியமிக்கப்படுகிறார்கள். அங்கேயுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் இப்போது டாக்டர் பி. இராமேஸ்வரன் என்ற மருத்துவர் 1-8-1987-லேயிருந்து பணியாற்றுகிறார். டாக்டர் ஜி. ஏ. சிவக்குமார் என்பவர் 1-4-1989-லேயிருந்து பணியாற்றுகிறார். இரண்டு டாக்டர்கள் அங்கே நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இரண்டு மருத்துவர்களைத்தான் நியமிக்க முடியும். ஆகவே அங்கே இரண்டு டாக்டர்கள் பணியாற்றிக்கொண்டு இருக்கி றார்கள். உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுவதைப்போல அவர்கள் நீண்டகால விடுப்பிலே இருந்தால் அவர்களை மாற்றி விட்டு வேறு யாரையேனும் அங்கே நியமிப்பதற்கு அரசு ஏற்பாடு களைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**1990 எப்ரல் 23]**

9–55 மணி

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். தமிழகம் முழுவதும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் போடுகிற நேரத்தில் ஒரு மாத காலம் பணியாற்றிவிட்டு விடுப்பில் சென்று விடுகிறார்கள். அப்படி ஆண்டுக்கணக்கில் விடுப்பில் இருப்பதால் மருத்துவர்களே இல்லாத சூழ்நிலை தமிழகத்தில் பல மருத்துவ நிலையங்களில் இருக்கின்றன. இதைத் தவிர்க்கிற வகையில் ஏதாவது ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து நியமிக்கப்படுகிற மருத்துவர்கள் தொடர்ந்து பணியாற்றும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களின் அடிப்படையில்தான் இந்த அரசு தற்காலிக டாக்டர்களை நியமிப்பது என்ற நிலையை உருவாக்கி, 500 டாக்டர்களை இன்றைக்கு நியமித்திருக்கிறது. அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நியமிக்கப்படுகிறபோது நீண்ட கால விடுப்பில் செல்லமுடியாது. 1–2 நாட்கள் விடுப்பு எடுத்தால் கூட அப்படி விடுப்பு எடுத்த டாக்டர்கள் நீக்கப்படும் வாய்ப்பை அரசு பெற்றிருக்கிறது. ஆகவேதான் இந்த தற்காலிக டாக்டர்களை நியமித்திருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டிய குறைகளை நீக்குகிற வகையில் இந்த அரசு நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மீன் பிடிக்கும் உரிமை.

**2191.** திரு. நா. இராமகிருஷ்ணன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பெரியார் அணையில் மீன் பிடிக்கும் உரிமை எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டத்திலுள்ள பெரியார் நீர்த் தேக்கத்தில் உள்ளூர் மீனவர்களைக் கொண்டு பங்கு அடிப்படையில் மீன் துறையால் மீன் பிடிப்பு நடத்தப்பட்டு வருகிறது.